# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு (மெய்மம்)

தொகுப்பாசிரியர்
**பாரி முடியரசன்**

## உள்ளுறை

பக்கம்

பதிப்புரை
முன்னுரை
மெய்மம்
1. சுதமதி
2. படமும் பாடமும்
3. என்ன உலகமடா?
4. இன்பத்தின் நிழல்
5. இரண்டும் உண்டு
6. நாடகம் ஆடுகிறான்
7. வறுமைப் பிணி
8. விளம்பர உலகம்
9. உள்ளமும் உதடும்
10. மீண்டும் வருமோ?
11. கடவுள் எழுதிய கவிதை
12. கொலைக்களம்
13. துயரக் கவி
14. தேன் கூடு
15. அவன் தான் இறைவன்
16. உலக நாடகம்
17. குழம்பிய உலகம்
18. கவி மயக்கம்
19. யார் பொறுப்பார்?
20. என்னென்ன பேசுகிறான்!
21. ஏமாளி உலகம்
22. இருவகை மயக்கம்
23. தப்புத் தாளம்
24. படிப்பும் நடப்பும்
25. தன்னம்பிக்கை
26. சேரிடம் அறிந்து சேர்
27 ஆசையெனும் ஆழ்கடலில்
28. எத்தனைப் பாடல்கள்
29. வாழ்க்கைப் போராட்டம்
30. இன்பம் எது?
வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை
வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு
பாரி முடியரசன் பற்றி

# மெய்மம்

[வீறுகவியரசர் முடியரசனார் 'மெய்மம்' பற்றிப்
பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)

## 1. சுதமதி (குறுங்காவியம்)
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

### பூவும் பூவையும்

பல்வகை மலர்தொறும் பாடிப் பாடிப்
புல்லிதழ் அகமெலாம் ஞெகிழப் புக்குத்
தேறல் மாந்திச் சுரும்பினம் திரிதரும்,
ஆரல் பார்த்து நாரை தவஞ்செயும்
பொய்கை சூழும் பொதும்பர் அதனுள்
பெய்வளை ஒருத்தி பேணினள் செலீஇ
நறுமலர்ச் செடிதொறும் நாண்மலர் கொய்தனள்
திருமணம் பெறாஅச் சேயிழை; அவள்இடை
நிகர்த்தோம் நாமென நினைத்தஓர் பூங்கொடி
முகிழ்த்தநல் லரும்பால் நகைத்துச் செருக்கத்
தருக்கினை நோக்கிய தையல் முறுவலால்
தருக்கினை அடக்கித் தலைகொய் தனளே;
தாமரைப் பொய்கையுள் தளையவிழ் மலர்க்குக்
காமரு பொலிமுகங் காட்டினள்; அவ்வுழைப்
புரியவி ழாமுகைப் போதுகள் நோக்கலும்
கருவிளை விழியால் கவிழ்த்தனள் தலையை;
"இச்சிறு முகைக்கொரு ஒப்பிலை என்பால்"
என வாங்கு,
வெய்துயிர்ப் புறுங்கால் விம்மிய மார்பகம்
கண்டனள் களித்தனள் தண்டொடுந் திருகிக்
கொண்டனள் அம்முகை; கொவ்வைக் கனியைச்
சுவைத்தனள் அதுதான் துணையிதழ்க் கொவ்வாத்
தகைத்தென உமிழ்ந்தனள்; சாயல் நடைஎழில்
காணலும் மயிலொடு அன்னங் கலங்கின;
பாணொலி கேட்டுப் பைங்கிளி குயிலொடு
நாணின; இவ்வணம் நங்கை நின்றுழி

### அவனும் அவளும்

தொடுக்குந் தெரியல் தோளினன், சுடரொளி
விடுக்கும் பொற்பூண் விடலை, பலர்தொழும்
கடவுட் கோலக் காளை ஒருவன்
தடமலர்ச் சோலையுள் தையலைக் கண்டனன்;
கண்டார்ப் பிணிக்கும் காரிகை எழில்நலம்
உண்டான் விழியால், உலகின் அழகெலாம்
ஒருருக் கொண்டிங் குற்ற தோவெனத்
திகைத்து நின்றனன்; நிலத்தை நோக்கினள்,
பதைத்தனள் நிமிர்ந்தாள், பார்வையைத் திருப்பினன்;
ஈரிரு விழிகளும் மாறி மாறி
ஒரிரு முறையால் ஒன்றிக் கவ்வின;
"நன்னுதல்! யார்நீ?" என்னலும் நாணினள்;
பின்புறம் தொங்கும் பின்னல் கண்டவன்
"என்னுயிர் பின்னினை எழில்முகங் காட்டி
நின்வர லாறுரை நேரிழாய்?" என்னலும்,
"சண்பை நகரெனச் சாற்றும் இவ்வூர்ப்
பண்பினன் வேதப் பார்ப்பன முதுமகன்
அழலோம் பாளன் அன்பினன் கோசிகன்
என்போன் மகள்யான் என்பெயர் சுதமதி"
இம்மொழி செப்புமுன் இளையன் உணர்வால்
கைம்மலர் பற்றிக் கனியிதழ் கொய்தான்
செய்வகை யற்றுச் சேயிழை நின்றனள்;
"வயங்கிழை மாதே! வடபுலத் துறைவேன்
பயங்கெழு பூம்புகார்ப் பதியில் நிகழ்வுறூஉம்
இந்திர விழாவுக் கேகினன், வழியிடை
முந்திய தவத்தால் முன்வந் துற்றனை!
என்பெயர் மாருத வேகன் என்பர்

அன்பின் கிழத்தி ஆகுதி!'' என்று
வன்பால் அவள்கைம் மலரினைப் பற்றினன்;
''இணர்மண மாலை ஏற்று மகிழும்
மணம்பெறா முன்னர் மலருடல் தீண்டுதல்
குணமிகு செயலெனக் கூறார்'' என்றனள்;
''யாழோர் மணத்தால் யானுனைக் கூடுவேன்
தோழீஇ!'' எனஅவள் தோள்தழீஇச் சென்று
பூம்புகார்த் தங்கிப் போகம் சுவைத்தனன்;

## யாழும் வாழ்வும்

பெருமுழ வெங்கணும் திருவிழா அறைந்தன,
தெருவெலாந் தோரணம் வாரணந் திகழ்ந்தன,
மகார்முதல் யாவரும் மனங்களி கூர்ந்தனர்,
புகார்நகர் விழாவிற் பொலிந்தது யாண்டும்,
அலைமணற் கரையெலாம் நிலவினர் மக்கள்,
இளைஞர் துணையொடும் இன்னிசை பாடினர்,
குழலும் யாழும் கூடி இசைத்தன,
மழலைச் சிறுமகார் மணலில் ஆடினர்,
மாந்தர் ஒலியொடு மற்றிசை ஒலியும்
சேர்ந்து கடலொலி சிறிதெனச் செய்தது;
மாருத வேகன் மனத்தினில் மகிழ்ச்சி
சாருத லின்றித் தனிமையை நாடிச்
சிந்தனை முகத்தில் தேக்கின னாகி
நந்தின் சினைகள் சிந்திய ஒருபால்
புந்தியில் அலைகள் புரள இருந்தனன்;
''என்மனங் கவர்ந்தோய்! யாதுற் றனைகொல்?
நின்முகஞ் சோர்வுறின் என்னுளஞ் சோர்வுறும்,
இந்திர விழாவில் வந்தோர் யாரும்
நொந்திலர், மகிழ்வைச்சிந்தையில் தேக்கினர்,
நாமுங் களிப்போம் வா''வென நீவிச்
சுதமதி யாழினைச் சுருதி கூட்டினள்
புதுவகைச் சுவையெலாம் பொருந்தப் பாடிக்
காணா இன்பக் காதல் ஊட்டினள்
ஆணோ யாழில் அவலம் மீட்டினன்
மாருத வேகன் மாறின னாகக்
காரிகை கலங்கினள்; ''காதலி! இசையில்
அவலம் காதல் அனைத்தும் சுவையே
கவலை நினக்கேன்? கைவிரல் ஒட்டி
மீண்டும் யாழினை மீட்டுதி கண்ணே!
காண்டும் இன்பங் களிஉல கதனில்''
என்றனன்; தோகை எடுத்தனள் யாழை;
ஒன்றிய குரலால் உள்ளம் உருக
அவலச் சுவையே அவளும் பாடினள்;
திவவுக் கோல்யாழ் தெரிநரம் பிடையே
சுவைசெய் சிறுவிரல் துடிப்புடன் தடவி
முடிநிலை யுறுங்கால் முறிந்ததோர் நரம்பே;
இடியொலி கேட்டெனத் துடியிடை நடுங்கி
இதய நரம்புதான் இற்ற தோவெனப்
பதறினாள்; ''அஞ்சேல் பாவாய்'' என்றனன்;
இருப்பினும் அவள்மனம் ஒருப்பட வில்லை;

## காதலும் கடவுளும்

சிரிப்பினை யிழந்தனள் சிந்தையிற் கலக்கம்
நிறைந்தனள்; அவளுறு துயரம் நீக்குவான்
''அலையெழு புனலிடை மலைநிகர் மரக்கலம்
பலவரூஉம் அழகினைப் பார்''எனப் பகர்ந்தனன்;
''அலமரும் மரக்கலம் ஆகினேன் யான்''எனச்
சிலைநிகர் அம்மகள் செப்பின ளாகப்,
பலவகைச் செடிதொறும் பறந்து படிந்து
மலரிடைத் தேன்நுகர் வண்டுகள் காண்''என,
''அலர்தரு நறவம் அருந்திப் பிறிதொரு
மலர்முகம் நோக்கும் வண்டினம் புரிசெயல்

நின்னிற் றோன்றா தொழிகதில் அம்ம!”
என்னலும், இளையன் “ஏனுனக் கையம்?
உலையில் காய்ச்சி உருக்கிய பொன்னால்
மேற்றிசை வானை மெருகிடல் போல்நிறம்
தீற்றிய கதிரோன் மறையும் செக்கர்
வானெழில் காணுதி! வாட்டந் தவிர்தி!
வீணில் ஐயுறின் விளைவன தீயவே”
இங்ஙனம் ஆற்றியும் இளையோள் தெளிந்திலள்;
“வானை மினுக்கி மறைவுறுங் கதிரென
என்னை மயக்கி என்னலம் நுகர்ந்து
மின்போல் மறைதல் நின்பால் நிகழுமோ
என்னும் ஐயம் எழுந்ததென் உளத்தே;
யாழோர் கூட்டமென் றென்னலம் உண்டனை!
கீழோர் நாட்டம் எனநிலங் கிளக்கவும்,
நம்பிய நானிவண் நரம்பறும் யாழென
வெம்பவும், கைவிடல் கனவிலும் விழையேல்”
இருவிழி கலங்க இயம்பினள் இங்ஙனம்;
“சிறுமதி யுடையாய்! செய்கையில் பொய்க்கும்
குறுமனம் இல்லேன், கொண்டவள் தவிக்கக்
காதல் பொய்க்கும் கயவனும் அல்லேன்
காதல் இன்றேல் சாதல் இதுமெய்!
தெய்வம் உண்டெனத் தெளிகுவை யாயின்
செய்நம் காதல் மெய்யெனத் தெளிகுவை
பெண்மதி பின்மதி! ஆம்இஃ துண்மை!
கண்ணிழி நீர்துடை! கலங்குதல் ஒழி”என்
றுள்ளம் மாற்றி ஊக்கினன் சென்றான்.
பள்ளியில் மெல்லிய பஞ்சணை துயிலும்
கள்ளவிழ் கோதை கனவுகண் டஞ்சி
நள்ளிர வதனில் நடுங்கிப் பிதற்றனள்;
தேற்றினன் தெளிந்தாள், துயிற்றினன் துயின்றாள்;

### பூவையும் புலம்பலும்

காற்றுடல் வருடக் கண்மலர் அவிழ்ந்தாள்
கதிவரற் கண்டாள் காதலற் காணாள்
அதிர்ந்தனள் உள்ளம் அந்தோ பேதை!
ஓடினள் தேடினள் ஊரலொந் தேடினள்!
வாடினள்; இரவொடு மாருத வேகன்
ஓடினன் என்பதை உணர்ந்தனள் தளர்ந்தனள்;
“கடவுளைக் காட்டிக் கழறினன் நம்பினேன்,
கடவுள் போலவன் கட்படாஅ தொழிந்தனன்,
வடவன் கூற்றை வாய்மைஎன் றெண்ணி
இடங்கொடுத் ததனால் இந்நிலை உற்றேன்,
மடவன் இவ்வணம் மாறினன், காதல்
நலமறி யாமகன் நயவஞ் சகனிவன்
குலமகன் அல்லன் கொடியன்! எங்கே
ஏகுவென் யானினி எங்ஙனம் வாழ்கேன்?
பெண்மதி பின்மதி என்று பேசினன்,
உண்மை உண்மை, உணரா தொழிந்தேன்,
வேக மாருதம் என்ன விரைந்தனன்,
போகிய மாருத வேகனுக் கப்பெயர்
ஒன்றும் பரிசென இன்றிங் குணர்ந்தேன்”
என்றெலாம் அரற்றி இருந்தனள் சுதமதி;

### தந்தையும் மகளும்

சண்பை நகரோன் சதுர்மறை யாளன்
நன்மனை யிழந்த நரைமுதிர் கோசிகன்
தன்மகட் காணான் தனித்துய ரெய்தித்
தென்னங் குமரி நன்னீர் ஆட
நண்ணும் மாக்களொடு நாடினன் பெயர்வோன்
கடலொடு கலக்கும் காவிரி மூழ்கிய
வடமொழி யாளரொடு வருவோன் புகாரில்
பிழைமணப் பட்டஅப் பேதையைக் கண்டனன்;

மழையெனக் கண்ணீர் வடித்துத் தன்மகள்
உற்ற இடும்பை முற்ற உணர்ந்து
பெற்றவள் நிலைக்குப் பெரிதும் வருந்தித்
தன்பதி செல்லின் வன்பழி நேரும்
என்பதால் ஆங்கண் இருந்தனன்'' அவளைப்
பிரியா னாகிப் பிச்சையாற் புரந்து
திரிவோன் ஒருநாள் தெருவரு புனிற்றாப்
பாய்ந்திட ஆங்கே சாய்ந்தனன்; மகளொடும்
மறைநூல் மாந்தர் வாழிடன் குறுகி
உறைவிடம் வேண்டினன்; ஓதிய அந்தணர்
''பிழைநடை யுடைய பேதை நின்மகள்
உழைய ளாகலின் ஒதுங்கிடம் இலை, இது
வேதம் பயிலிடம் விரைந்தே அகலுதி''
என்றனர் வேதியர்; இருவரும் பின்னர்ச்
சமணப் பள்ளியைச் சார்ந்து ''நும்சரண்
இவண்எமக் கொருதுணை யில்லேம்'' என்றனர்;
''புரிநூன் மார்பிற் பொலிவீர்! நீவிர்
வேள்வி யியற்றி வேத நெறிப்படூஉம்
ஆள்வினை உடையீர் ஆதலின் ஈண்டுப்
புகுந்தக வில்லீர் முரணிய புன்மைகள்
நுழைந்திடின் எம்நெறி பிழையுறும்'' என்று
கையுதிர்த் தொதுக்கினர்; கலங்கிய முதுமகன்
வெய்துயிர்த் தாங்கோர் வேற்றிடன் குறுகினன்;
பாங்குறும் புத்தப் பள்ளியைக் காணலும்
ஈங்குறல் சாலவும் ஏற்புடைத் தாகும்
என்றுளங் கொண்டோன் மகளொடும் புக்குப்
''பெரியீர் நும்சரண் பேதுற வுற்றோம்
அருளீர் அருளீர் ஐயகோ அருளீர்''
என்றரற் றுரைக்க இரங்கிய சாரணர்
''நின்துயர் துடைத்தோம், நீள்துய ருற்று
நின்ற மகளொடும் வைகுதி'' என்றனர்;
தப்பிய தன்மகள் சுதமதி தன்னொடும்
புத்தப் பள்ளியில் புகலிடம் பெற்றனன்;

**பாலும் பிரையும்**

புகுந்த மறைநூல் புகல்நெறி யாளர்க்கு
நெகிழ்ந்திடங் கொடாஅ நிலையின தாதலின்
சமணக் கொள்கை தகவிழந் தழியப்
பகையாய் மாறிப் பழிவாங் கினரே;
புத்தமோ அவர்க்குச் சித்தம் நெகிழ்ந்தது
கருணை ஒன்றே கருப்பொரு ளாதலின்
முரணிய கொள்கை நெறியினர் தமக்கும்
புகலிடம் தந்தது; புக்கவர் நண்பாய்
நகுமுக முடையராய் நன்கனம் பழகினர்;
காய்ச்சிய பாலிற் கலந்தது பிரையே
புத்தமுந் திரிந்தது பூத்தநன் னிலத்தே!

---

**பாடற் குறிப்பு:–** இஃது ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை தரும் செய்தியாகும். மணிமேகலையின் தோழி சுதமதி. இவள் வரலாறு மலர் வனம்புக்க காதையில் 29 முதல் 41 வரையிலுள்ள வரிகளில் காணப்படுகிறது. அதனை விரிவு படுத்தி, வேத நெறியால் சமண நெறிக்கும் புத்த நெறிக்கும் நேர்ந்த விளைவுகளையும் கூறுகிறது இந்நெடும் பாட்டு.

## 2. படமும் பாடமும்
**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

பாடத்தை மறந்துவிட்டான் – தலைவன்
படத்தைமட்டும் எங்கும் திறந்துவைத்தான்
–பாடத்தை

தொடுப்பு

வேடத்தை நல்லதென் றேற்றுக் கொண்டான்
வெற்றொலி எங்கணும் சாற்றிக் கொண்டான்
—பாடத்தை

முடிப்பு

சந்தையில் கூடுதல் போலவே கூடுவான்
சந்தடி யின்றியே போரெனில் ஓடுவான்
மந்தையில் கூடல்போல் மாந்தனும் கூடினால்
மாண்புகள் நாட்டினில் கிட்டுமோ தேடினால்?
—பாடத்தை

கூடையில் பூக்களைப் பார்ப்பது போதுமா?
கொண்டையில் வைத்தெழில் சேர்ப்பது பாவமா?
மேடையில் கொள்கையை வைப்பது போதுமா?
மேவிடும் வாழ்க்கையில் விட்டிடல் ஆகுமா?
—பாடத்தை

## 3. என்ன உலகமடா?

**(நூல்:—காவியப் பாவை)**

தேமலர்ச் சோலைதனில் – ஒருநாள்
சென்று புகுந்திருந்தேன்
மாமரக் கூட்டமங்கே – பூத்து
மாமணம் வீசியதே 1

தென்றல் உலாவரலால் – இனிமை
தேடி வரவுங்கண்டேன்
ஒன்றிய நல்லமைதி – நெஞ்சில்
ஓங்கிட நின்றிருந்தேன் 2

எங்கிருந் தோஇனிய – குரலொன்
றென்னைக் கவர்ந்ததுவே
அங்கிருந் தேகினன்நான் – குரல்வரும்
அந்தத் திசைவழியே 3

கன்னங் கரியஉடல் – எழிலைக்
காட்டும் சிவந்தகண்கள்
மின்னும் அழகினையே – கண்டு
மெய்மறந் தங்குநின்றேன் 4

கன்னங் கருநிறந்தான் – எனினும்
காதலிற் சிக்கிவிட்டேன்
இன்னும்நீ பாடிடுவாய் – என்னை
இன்பத்தில் ஆழ்த்திடுவாய் 5

என்னலும் அவ்விசைதான் – மீண்டும்
எங்கும் நிறைந்ததுவே
கன்னலின் சாற்றினிமை – உவமை
காட்டுந் தரமிலதே 6

யாழில் எழுமிசையோ – குழலோ
யாதெனக் கூறிடுவேன்?
பாழுல கைமறந்தேன் – அந்தப்
பைம்பொழில் இன்னிசையால் 7

அவ்விசை கேட்டொருவன் – ‘அடடா!
அக்குயில் வாழ்க’ வென்றான்
செவ்விய ஓர்கவண்கல் – மோதிடச்
சென்று பறந்ததுவே 8

‘சென்று பறந்ததடா – அடவோ!

செத்து மடிந்திருந்தால்
மென்று புசிப்பதற்கே — அக்குயில்
மெத்தச் சுவைக்குமடா!’ 9

என்னச் சலித்துரைத்தான் — கவண்கல்
எய்த சிறுகயவன்
என்ன உலகமடா! — நன்மை
எப்படி வாழுமடா! 10

## 4. இன்பத்தின் நிழல்
**(நூல்:—காவியப் பாவை)**

நல்லதோர் யாழினை பெற்றுவந்தேன் — அதை
நானெடுத் தேஇசை மீட்டிநின்றேன்
மெல்லிசை என்செவி பாய்கையிலே — அதில்
மேவிய ஓர்நரம் பற்றதடா! 1

செந்தமிழ்க் காவியம் செய்துவைத்தேன் —அதில்
சிந்தனை யாவையும் பெய்து வைத்தேன்
வந்தது வாழ்வென நம்பிநின்றேன் — அது
மண்ணிற் புதைந்து சிதைந்ததடா! 2

பச்சைப் பசுங்கிளி பாய்ந்துவந்தே — என்பால்
பாச முடன்மொழி பேசியதே
இச்சைஎலாம் அதில் வைத்திருந்தேன் — மனம்
ஏங்கிடப் பூனையும் கவ்வியதே! 3

கண்கவர் சிற்பமொன் றாக்கிவைத்தேன் — அதில்
கற்பனை யாவையும் தேக்கிவைத்தேன்
புண்பட என்மனம் ஆனதடா — அந்தப்
பொற்சிலை பாழ்பட்டுப் போனதடா! 4

புத்துலகம் ஒன்று நான்படைத்தேன் — அதில்
பொன்னிற மாளிகை கட்டிவைத்தேன்
பித்தனைப் போல்மனம் பேதுறவே — அதில்
பேரிடி ஒன்று விழுந்ததடா! 5

---

**பாடற் குறிப்பு:—** கவிஞரின் ஐயாட்டைப் பருவத்து ஆண்மகன் இயற்கை எய்தியபொழுது மனம் வெம்பிப் பாடியது — 1959.

## 5. இரண்டும் உண்டு
**(நூல்:—காவியப் பாவை)**

இன்பம் ஒருகரை துன்பம் ஒருகரை
இரண்டும் கொண்ட ஆறடா — வாழ்வு
இரண்டும் கொண்ட ஆறடா
இரண்டு கரையும் இல்லை என்றால்
வறண்டு போகும் பாரடா — இதைத்
தெரிந்து நெஞ்சம் தேறடா! 1

வரவும் உண்டு செலவும் உண்டு
வாழ்க்கை என்ற ஏட்டிலே — நம்
வாழ்க்கை என்ற ஏட்டிலே
பிறப்பும் இறப்பும் பிணைந்து தோன்றும்
பெருமை யுண்டு நாட்டிலே — இதைப்
பேசுமே குறள் பாட்டிலே! 2

இரவும் பகலும் இரண்டும் ஒன்றாய்
இணைந்த தேஒரு நாளடா — ஒன்றாய்

இணைந்த தேஒரு நாளடா
இரண்டும் உலகில் மாறிமாறி
இயங்கும் உண்மை கேளடா – இதை
எண்ணி மண்ணில் வாழடா! 3

---

**பாடற் குறிப்பு:–** மகனைப் பிரிந்த துயர்தீரப் பாடியது.

## 6. நாடகம் ஆடுகிறான்

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

பூமியில் நாடகம் ஆடுகிறான் – மனிதன்
பொய்ம்மை வேடங்கள் போடுகிறான் – வேடம்
போடும் பாணியில் பாடுகிறான்
–பூமியில்

முடிப்பு

கல்வியில் வேடம் அரசியல் வேடம்
கடவுளைக் காணுந் துறையினில் வேடம்
நல்லவன் வல்லவன் போலே வேடம்
நட்பிலும் பேச்சிலும் அனைத்திலும் வேடம்
–பூமியில்

கால்களைப் பிடிப்பான் கைகளைப் பிடிப்பான்
காரியம் முடிந்தால் கழுத்தினைப் பிடிப்பான்
வாலையும் பிடிப்பான் வாழ்விலும் நடிப்பான்
வந்ததைச் சுருட்டி ஓட்டம் பிடிப்பான்
–பூமியில்

கண்களில் நீரும் கைகளில் கும்பிடும்
காட்டி நடிப்பான் உலகமும் நம்பிடும்
எண்ணும் நினைப்பினில் எத்தனை வஞ்சம்
இவனை நினைத்தால் நடுங்கிடும் நெஞ்சம்
–பூமியில்

## 7. வறுமைப் பிணி

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

வறுமை எனும் பிணியே – கொடிதே
வறுமை எனும் பிணியே
–வறுமை

தொடுப்பு

சிறுமைகள் வந்திடச் சிந்தையும் நொந்திடத்
தீமைகள் தந்திடும் தீரமும் சிந்திடும்
–வறுமை

முடிப்பு

புல்லரைப் பெரிதாப் போற்றுவர் பொன்னால்
பொருளிலை என்றால் புகழிலை இந்நாள்
கல்லறைப் பிணமும் காசென்று சொன்னால்
கணத்தினில் பேசிடும் காரணம் என்னோ?
–வறுமை

கோடையில் காய்ந்த குளம்போல் வாழ்வு
குன்றிடும் அந்தோ கொடிதிந்தத் தாழ்வு

மூடிடும் வீட்டில் முந்துற ஓடி
முட்டவிடும் பணமே வாழ் உயிர்நாடி

—வறுமை

## 8. விளம்பர உலகம்

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

விளம்பர உலகமடா – புகழ்
விற்பனை நிலையமடா – இது

—விளம்பர

முடிப்பு

களம்பல கண்டவர் காளையர் எனினும்
கறிக்குத வாதவர் என்றுரை தூற்றும்
உளந்தனில் துணிவொரு சிறுதுளி யில்லா
ஒருவனை உயர்பெரு வீரனென் றேத்தும்

—விளம்பர

கூரிய அறிவொடு நேரியர் எனினும்
கூளங்கள் போலவர் வாழ்வினைத் தேய்க்கும்
சீரிய மதிசெயல் இல்லவன் ஆகினும்
சீர்நலம் யாவையும் அவனிடஞ் சேர்க்கும்

—விளம்பர

நெஞ்சினில் தேங்கிய சிந்தனை தந்திடும்
நீள்புகழ்க் காவிய மாகினும் தாழ்த்தும்
பிஞ்சுளம் யாவையும் நஞ்சென மாற்றிடும்
பேதையர் தந்திடும் நூலினை வாழ்த்தும்

—விளம்பர

எத்துயர் ஆகினும் விட்டுயிர் போகினும்
ஏற்றிடும் கொள்கையர் வாழ்வினை வாட்டும்
மெத்தையில் சாய்ந்தவர் மேனிமி னுக்கியர்
மேடையில் வாழ்பவர்க் கின்பங்கள் ஊட்டும்

—விளம்பர

மல்லிகை யாகிய நன்மலர் தாமவை
மாபெரும் விளம்பரம் இல்லெனில் வீழும்
புல்லிய கள்ளியிற் பூத்தவை யாகினும்
பூமியில் விளம்பரம் உண்டெனில் வாழும்

—விளம்பர

மருள்படு சிந்தையர் மயங்கிய நெஞ்சினர்
மதியைம றந்தவர் இங்குளர் என்றால்
இருள்பக லாகிடும் பகலிர வாகிடும்
எதனையும் நம்புவர் விளம்பரம் ஒன்றால்

—விளம்பர

## 9. உள்ளமும் உதடும்

**(நூல்:—காவியப் பாவை)**

உள்ளமும் புகழும் உதடும் புகழும்
　உண்மை உணர்ந்திட வேண்டுமடா
கள்ளம் எதுவென உள்ளம் எதுவெனக்
　கண்டு தெளிந்திட வேண்டுமடா 1

நல்லவர் வருவார் அல்லவர் வருவார்
　நன்மைகள் பெறலாம் எனத்தேடிச்
சொல்லிடும் புகழ்மொழி சொக்கிட வைத்திடும்
　சோதனை செய்திட வேண்டுமடா 2

உண்மையும் உண்டாம் பொய்ம்மையும் உண்டாம்

உன்புகழ் பாடும் பாடலிலே
உண்மையும் பொய்ம்மையும் ஓர்ந்து தெளிந்திடும்
உள்ளம் உனக்கே வேண்டுமடா 3

நேற்றுனை வைதார் இன்றுனைப் புகழ்வார்
நிலைமையை எண்ணிப் பார்த்திடடா
காற்றுள போதே தூற்றிட வந்தார்
காரணம் இதுதான் கண்டிடடா 4

எட்டியின் கனிகள் இருவிழி கவரும்
எழிலினைக் கொண்டுள தறிந்திடடா
கட்டிய புனைமொழி கேட்டிடும் போது
காதுகள் குளிர்ந்திடும் தெரிந்திடடா 5

காட்டிய எழிலால் கனியது சுவைத்தால்
கண்களை மூடிடச் செய்திடுமே
ஊட்டிய புனைமொழி உரைத்திடும் உதடுகள்
உனையே மறுநாள் வைதிடுமே 6

கூவிடுங் குயிலுங் காகமும் ஒன்றெனக்
கொள்வது முறையோ சாற்றிடடா
நாவொடு மனமும் ஒன்றிய மாந்தர்
நல்லுரை கொண்டு போற்றிடடா 7

புகழ்ந்திடும் மொழியோ இகழ்ந்திடும் மொழியோ
பொதுப்பணி புரிவோன் ஒன்றெனவே
அகந்தனில் உடையான் புறந்தனில் உடையான்
அவனே தலைவன் மன்றினிலே 8

## 10. மீண்டும் வருமோ?

**(நூல்:—காவியப் பாவை)**

கண்பழு தாகினுங் காணலாம் — உலகைக்
காணுங் கருவியைப் பூணலாம்
பண்புகள் பாழ்பட நேருமேல் — என்ன
பக்குவஞ் செய்யினுந் தீருமோ? 1

உண்ணும் உணவுகள் மாறுமேல் — வேறோர்
உண்டி தனைக்கொண்டு தேறலாம்
எண்ணும் நினைவுகள் மாறுமேல் — பாரில்
எப்படி உயர்ந்திட லாகுமோ? 2

பள்ளம் படுகுழி வீழ்ந்தவன் — வந்து
பார்த்தவன் கைதர மீளலாம்
உள்ளம் படுகுழி வீழுமேல் — பின்னர்
ஓங்கிய வாழ்வினில் மீளுமோ? 3

நஞ்சினை உண்டொரு மாந்தனும் — உய்ந்து
நானில வாழ்வினை ஏந்தலாம்
நெஞ்சகம் வஞ்சனை உண்ணுமேல் — வாழ்வு
நேர்மையிற் சென்றிட ஒண்ணுமோ? 4

மந்தையில் மேய்ந்திடும் மாடுகள் — வந்து
மாலையில் வீட்டினைக் கூடலாம்
சிந்தை மேய்ந்திடப் போகுமேல் — வந்து
சேரிடம் எய்திடல் ஆகுமோ? 5

தேடும் பொருள்பழு தாகலாம் — பின்னர்த்
தேடின் அதுநிறை வாகலாம்
கூடும் மனம்பழு தாகுமேல் — எந்தக்
கொம்பனும் மீண்டிடல் ஆகுமோ? 6

வானம் வறண்டிடும் போதிலும் – தோண்ட
வந்திடும் நீரினால் வாழலாம்
மானம் வறண்டிட நேருமேல் – எந்த
மாந்தனும் வாழந்திட லாகுமோ? 7

செல்லும் வழிதடு மாறலாம் – மீண்டும்
செல்ல நினைத்தஊர் சேரலாம்
நல்ல நடைதடு மாறுமேல் – இந்த
நானில மேபழி கூறுமே! 8

## 11. கடவுள் எழுதிய கவிதை

(நூல்:–பாடுங் குயில்)

கவிதை வரைந்தவன் பாடிவந்தான் – அவன்
கடவுள் எனும்பெயர் சூடிவந்தான்
புவியில் நிகரெனக் கில்லையென்றான் – இது
புதுமைப் படைப்பெனச் சொல்லிநின்றான் 1

படிப்பறி யார்தமைக் காட்டி நின்றே – என்றன்
படைப்பினுள் ஒன்றிது காண்க என்றான்
எடுத்தறி வோடதைப் பார்த்தபின்னர் – அட
எழுத்துப் பிழையிது வென்றுசொன்னேன் 2

பொய்ம்மை வனைந்திடும் புல்லர்நின்றார் – தமைப்
புனைகவி யாமெனச் சொல்லிநின்றான்
செம்மை கெடுங்கவி செய்துவிட்டாய் – இது
சீர்கெட்ட பாட்டெனச் செப்பிவிட்டேன் 3

வாழ்வு பெரிதென மானம்விட்டார் – தமை
வாழுங் கவியெனக் காட்டிவிட்டான்
தாழ்வு படக்கவி ஆக்கிவிட்டாய் – இது
தளைகெட்ட பாட்டென நீக்கிவிட்டேன் 4

இமைப்பொழு தாகினும் இன்பமிலார் – பெறும்
இரந்துணும் வாழ்வினைப் பாடலென்றான்
அமைப்பினைப் பாழ்படப் பாடிவிட்டாய் – ஈது
அடிகெட்ட பாட்டென மூடிவிட்டேன் 5

வறுமை யுடன்வளங் காட்டிவந்தே – அவை
வளர்விதிப் பாட்டென நீட்டிவந்தான்
சிறுமை படக்கவி காட்டவந்தாய் – தொடை
சேர்கிலாப் பாட்டெனப் போட்டுநொந்தேன் 6

## 12. கொலைக்களம்

(நூல்:–பாடுங் குயில்)

கல்வியின் கொலைக்களம் கட்சிகள் – அந்தக்
கலைகளின் புதைகுழி பள்ளிகள்
கொல்களம் அறிவினுக் காசைகள் – அதைக்
கொள்குழி வெண்ணிறக் காசுகள் 1

புதுக்குரல் கவிதையின் கொலைக்களம் – அச்சுப்
புத்தக மேஅதன் புதைப்பிடம்
பதுக்குதல் வாணிகக் கொலைக்களம் – அதன்
படுகுழி கருநிறக் கணக்குகள் 2

பெண்மையின் கொலைக்களம் திரைப்படம் – அந்தப்
பிணந்தனைப் புதைப்பது துணிக்கடை

உண்மையின் கொலைக்களம் படித்தவன் – நீதி
ஓதிடும் மண்டபம் புதைப்பிடம் 3

இறைவனைக் கொல்பவர் போலிகள் – அங்கே
எழுப்பிடும் கல்லறை கோவில்கள்
உரிமையின் கொலைக்களம் ஆணவம் – அந்த
உரிமையின் புதைப்பிடம் வஞ்சகம் 4

மனத்தினைக் கொல்களம் அரசியல் – அதன்
மறைகுழி யாவது தினசரி
இனத்தினைக் கொல்களம் சாதிகள் – அதன்
இடுகுழி யாம்மத வாதிகள் 5

அன்பினைக் கொல்களம் தன்னலம் – அதன்
அடைகுழி ஆசைகொள் புன்மனம்
தன்மையை மாய்ப்பது கள்ளினம் – அதைத்
தாங்கிடும் புதைகுழி பெண்ணலம் 6

பண்பினைக் கொல்களம் சூதுகள் – அதன்
படுகுழி யாகிடும் வாதுகள்
மன்பதை சாய்வது மோதலில் – அதன்
மறைகுழி நால்வகை வேதமே. 7

## 13. துயரக் கவி
(நூல்:–பாடுங் குயில்)

குரல்மறந்த குயிலானான் – நீந்தும்
குளமிழந்த கயலானான்
இறகொடிந்த மயிலானான் – வாழ்வில்
இடருழந்தே மயலானான் 1

ஒலியிழந்த மணியானான் – பார்வை
ஒளிமறைந்த விழியானான்
கலிமிகுந்த துயராலே – பாவம்
களைதுறந்த முகமானான் 2

முகில்படர்ந்த நிலவானான் – தூசு
முழுதடைந்த சிலையானான்
துகில்வளைந்த படமானான் – சோகச்
சுவரெழுந்த மனையானான் 3

துயர்படர்ந்த கவியானான் – இன்பச்
சுவைமறந்த கலையானான்
புயலெழுந்த புவியானான் – துன்பப்
புகைபுகுந்த விழியானான் 4

நரம்பறுந்த யாழானான் – போரின்
நடுவொடிந்த வாளானான்
சுரும்பிருந்தே சூழாமல் – தேனின்
துளியிழந்த பூவானான் 5

கவிபொழிந்த முகிலம்மா – பாடற்
கனிமிகுந்த பலவம்மா
தவிதவிக்க விடினம்மா – யார்தான்
தலைவனுக்குப் புகலம்மா? 6

---

பாடற் குறிப்பு:– 12.9.1975 ஆம் நாள் பாடியது.

## 14. தேன்கூடு

(நூல்:—பாடுங் குயில்)

தென்மலைச் சாரலில் தேன்நிறை கூடு — கட்டக்
தேன்சுரும் பாயிரம் பட்டன பாடு
பொன்மலை மீதினில் பூமலர்க் காடு — முற்றும்
போய்வந்து தேன்மிகத் தேக்கிய வீடு 1

புன்மனப் பிள்ளையர் கண்டழுக் காறு — கொண்டு
பொங்கினர் வீசினர் வீண்மணற் சேறு
நன்மன வண்டுகள் கொண்டன வீறு — சென்று
நாண்மலர் தேடின நாடொறும் நூறு 2

ஆயிரம் சூழ்ச்சிகள் செய்தனர் கூடித் — தீயர்
ஆடினர் நாடகம் மேடையில் பாடி
போயின போயின சூழ்ச்சிகள் ஓடி — மாயப்
பொய்ம்மைகள் வீழ்ந்தன வேருடன் வாடி 3

ஆனிரை மேய்ந்திடும் ஆங்கொரு காடு — தன்னில்
ஆடிடும் பெண்மகள் தீங்குயிற் பேடு
வானுயர் சாரலில் தேன்விளை கூடு — கண்டு
வாயுற வாழ்த்தினள் அன்புளத் தோடு 4

வாழ்த்திய வாழ்த்தொலி பிள்ளையர் காது — புக்கு
வாட்டிட எண்ணினர் வேறொரு சூது
வீழ்த்திட வேண்டினர்; ஆமெனும் மாது — கல்லை
விட்டெறிந் தாள்மலைச் சாரலின் மீது 5

வீசிய கல்நுனி கூட்டினில் பட்டுக் கீழே
வீழ்ந்திடும் தேன்துளி பிள்ளையர் தொட்டுப்
பூசினர் நாவினில் கூசுதல் விட்டுப் — பின்னும்
பூமியில் தூற்றினர் நாநயம் கெட்டு 6

கோடுயர் தென்மலை தாழ்வதும் இல்லை — தேனின்
கூடுள சாரலும் வீழ்வதும் இல்லை
காடுகள் மேடுகள் பூத்துள முல்லை — மொய்த்துக்
கட்டிடும் [1]தேனினம் கூட்டினை [2]ஒல்லை 7

தேனினம் சஞ்சலம் விட்டன கூடி — மீண்டும்
தேடிடும் பாடிடும் பூவினை நாடி
வானுயர் மாமலைக் காவினில் பாடிச் — சென்று
வந்திடும் வென்றிடும் வாகைகள் சூடி 8

---

**பாடற் குறிப்பு:—** தமிழ்நாட்டு அமைச்சரவை கலைக்கப்பட்டபோது பாடியது—28.9.1976.

**அருஞ்சொற் பொருள்:—** 1. தேனினம் — தேனீக்கள். 2. ஒல்லை — விரைவாக.

## 15. அவன் தான் இறைவன்

(நூல்:—பாடுங் குயில்)

தனக்கென வாழ்பவன் ஒருவன் — அவன்
தாங்கிய வடிவம் மானிட உருவம்
—தனக்கென

தனக்கும் பிறர்க்கும் வாழ்பவன் மனிதன் — அவன்
தந்ததோர் பிறவியைப் போற்றிடும் இனியன்
—தனக்கென

தனக்கென முயலான் பிறர்க்கென முயல்வான்
தன்னையும் பொன்னையும் அவர்க்கெனத் தருவான்
மனத்துயர் சூழும் பொழுதினும் அயரான
மதியான் தன்னலம் அவன்தான் இறைவன்
—தனக்கென

நிலத்தினில் தோன்றும் எப்பொரு ளாயினும்
நிறைபயன் பிறர்பெறப் பயன்பட லாயின
புலப்படும் அறிவோ ஆறுள வாயினும்
புரிந்திலன் பொதுநலம் அவனா மானிடன்?
—தனக்கென

---

**பாடற் குறிப்பு:—** 29.9.1976 ஆம் நாள் பாடியது.

## 16. உலக நாடகம்

**(நூல்:—பாடுங் குயில்)**

உலகம் ஒரு நாடகம் – அதில்
ஒவ்வொரு மனிதனும் போடுவன் வேடம்
—உலகம்
நிலவிய அரங்கம் இல்லாமல் நடிப்பான்
நினைப்பதை முடித்திடச் சுரங்களும் பிடிப்பான்
—உலகம்
இரவினில் போடும் எழில்மிகு வேடம்
எதுதான் காணும் பகல்வரும் போது?
பொருள்வரும் வேளை உறவுகள் கூடும்
போனபின் எங்கோ புகுந்திட ஓடும்
—உலகம்
தாளமும் உண்டு மேளமும் உண்டு
தாந்திமி தோமென ஆடலும் உண்டு
வேளைகள் கண்டு பாடலும் உண்டு
விடிந்ததும் ஓடும் கிடைத்தது கொண்டு
—உலகம்
[1]சொல்லதில் வேந்தன் நடித்திடும் போது
சொன்னதைத் தாண்டும் திரைவிழும் போது
நல்லவன் மாந்தன் கதிர்வரும் போது
நாயினும் கீழாம் அதுவிழும் போது
—உலகம்
அரங்கினில் நின்றால் அவனொரு பாரி
அதன்பின் என்றால் படு[2]முல்லை மாறி
இரங்கிடச் செய்வான் இனியவை கூறி
ஏய்த்தபின் செல்வான் பிறர்நலம் வாரி
—உலகம்

---

**பாடற் குறிப்பு:—** 29.9.1976 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. சொல்லதில் வேந்தன் – அரிச்சந்திரன்.
2. முல்லை மாறி – இயல்பு கெட்டவன்.

## 17. குழம்பிய உலகம்

**(நூல்:—பாடுங் குயில்)**

கள்ளர்கள் எல்லாம் வள்ளல்க ளென்றால்
கண்ணியம் என்றொரு சொல்கிடையாது
கொள்ளைக ளெல்லாம் வாணிகம் ஆனால்
குடியர சென்றிட வாயினி ஏது? 1

தந்நல மொன்றே வாழ்வெனக் கொண்டோர்
தலைவர்கள் போலே வேடம ணிந்தார்
அந்நிலை ஏதும்அறிகிலர் மாந்தர்

ஆந்தையை மாங்குயில் என்றுநி னைந்தார் 2

கோழைக ளெல்லாம் நாடகம் ஆடிக்
கூத்திடு கின்றார் வீரர்கள் போலே
தாழைகள் எல்லாந் தேக்குகள் என்றார்
தாளங்கள் போட்டதை நம்புவ தாலே. 3

எருக்கிலைப் பூவைத் தெருக்களில் விற்றால்
எத்தனை எத்தனைப் பேர்வரு கின்றார்!
மருட்கொளி போலே சூடியுங் கொண்டார்
மல்லிகை முல்லையை ஏன்வெறுக் கின்றார்? 4

மிஞ்சிய காமம் மேனியிற் சாயம்
மேவிய தொழிலைக் கலையெனச் சொன்னால்
அஞ்சிடல் அன்றி ஆறுதல் உண்டோ?
ஆருயிர்ப் பண்புகள் அழிந்திடும் இந்நாள் 5

உரைநடை எல்லாம் பாடல்க ளென்றால்
உயரிய கவிதை நிலைஎன் னாகும்?
வரைபட மெல்லாம் ஓவிய மென்றே
வாழ்த்தொலி கூறின் வாழ்கலை சாகும்! 6

கருச்சிதை வெல்லாம் பிள்ளைக ளென்றால்
கண்டவர் ஏளனம் செய்திடு வாரே
தெருப்படி யாகித் தேய்ந்திடுங் கல்லைத்
தெய்வமென் றாலதை நம்புவர் யாரே! 7

போலிக ளெல்லாம் உண்மைகள் என்றால்
பூமியில் நன்மைகள் வாழ்வதும் ஏது?
வேலிக ளெல்லாம் பைம்பயிர் ஆனால்
விளைநில மென்றொரு சொல்கிடை யாது 8

நல்லது கெட்டது கண்டறி யாது
நடந்திடும் செம்மறி யாடுகள் போலே
செல்கிற மாந்தர் சேரிடம் எங்கோ?
சிந்தைகள் யாவுங் குழம்பினர் அந்தோ! 9

---

**பாடற் குறிப்பு:–** 30.9.1976 ஆம் நாள் பாடியது.

## 18. கவி மயக்கம்
**(நூல்:–பாடுங் குயில்)**

ஒய்ந்து போன என் னுள்ளம் – உன்னுள்
தோய்ந்த போதுதான் இன்பம்! இன்பம்!
–ஓய்ந்து
காய்ந்து வாடுமென் வாழ்வில் – இன்பக்
காதல் நீருடன் சூழ்வாய்! சூழ்வாய்!
–ஓய்ந்து
கனவும் இல்லை நனவும் இல்லை
கானல் நீரா? அதுவும் இல்லை
மனமும் மயங்கும் மதியும் மயங்கும்
மதுதான் என்றால் அதுதான் இல்லை
–ஓய்ந்து
இரவும் இல்லை பகலும் இல்லை
இணைவிழி தாமோ உறங்கவும் இல்லை
உறவும் இல்லை பகையும் இல்லை
உளமொரு கடலோ? கரையே இல்லை
–ஓய்ந்து
விண்ணும் இல்லை மண்ணும் இல்லை
வெற்றிட மோஎனில் அதுவும் இல்லை
கண்ணில் காணாக் கற்பனை இல்லை

கவிமகள் உன்னைப் போல்பவள் இல்லை
—ஓய்ந்து

உயிரில் உணர்வாய் உணர்வில் உயிராய்
உளமெனும் அரங்கில் திருநடம் புரிவாய்
பயிரில் மணியாய் மணியுள் பயிராய்
பயில்பவ ளேநீ மருவிட வருவாய்
—ஓய்ந்து

---

**பாடற் குறிப்பு:—** 30.9.1976 ஆம் நாள் பாடியது.

## 19. யார் பொறுப்பார்?

**(நூல்:—பாடுங் குயில்)**

அன்றொரு காவியம் ஆக்கி வைத்தேன் — அதில்
ஆயிரம் கற்பனை தேக்கி வைத்தேன்
இன்றொரு பாடலை ஆக்குகின்றேன் — மன
ஏக்கத்தை நானதில் தேக்குகின்றேன் 1

செந்தமிழ் வாழ்ந்திடச் சொல்லிவைத்தேன் — அதில்
செய்வன யாவையும் அள்ளி வைத்தேன்
வந்தது வாழ்வெனப் பாடிநின்றேன் — இன்று
வந்தது கண்டுளம் வாடுகின்றேன் 2

காவியம் பற்றியே தூற்றுகின்றார் — கொடுங்
காரியம் என்னென்ன ஆற்றுகின்றார்
நாவினை எப்படி மாற்றுகின்றார் — அட!
நாட்டினில் பொய்ம்மையை ஏற்றுகின்றார் 3

கற்பனை யாவையும் யாரழித்தார்? — அந்தக்
காவிய ஏட்டினை யாரெடுத்தார்?
பற்பலர் போற்றிடப் பேரெடுத்த — அந்தப்
பாக்களை மாற்றிடின்யார் பொறுப்பார்? 4

---

**பாடற் குறிப்பு:—** நாட்டு நெருக்கடி நிலையிற் பாடியது — 26.11.1976.

## 20. என்னென்ன பேசுகிறான்!

**(நூல்:—பாடுங் குயில்)**

வந்த போதுதான் என்ன பேசினான்?
செல்லும் போதுதான் என்ன பேசினான்?
வந்து வாழ்கிற போது மானிடன்
வாயில் என்னென்ன பேசுகிறான்! 1

மாலை கண்டதும் மேடை ஏறுவான்
வாயில் வந்ததை வாரி வீசுவான்
காலை வந்ததும் கோலம் மாறுவான்
காசுக் கென்னென்ன பேசுகிறான்! 2

யாரும் வாழ்ந்திடக் காணக் கூசுவான்
யாவுங் கண்டது போலப் பேசுவான்
பாரில் நேர்மையைத் தூக்கி வீசுவான்
பாவி என்னென்ன பேசுகிறான்! 3

கோள்கள் கூறியே சண்டை மூட்டுவான்
கொள்கை வாதியைப் போலக் காட்டுவான்
தேள்கள் வாழ்ந்திடும் நாவை நீட்டியே
தீயன் என்னென்ன பேசுகிறான்! 4

---

**பாடற் குறிப்பு:–** 26.11.1976 ஆம் நாள் பாடியது.

## 21. ஏமாளி உலகம்

**(நூல்:–பாடுங் குயில்)**

எழுதிட நம்பும் பேசிட நம்பும்
ஏமாளி உலகமடா – அதைப்
பழுதற ஆய்ந்து பார்த்திடத் தெரியாப்
பாழும் உலகமடா 1

அச்சினில் வந்தால் அதுதான் வேதம்
அப்படிப் பார்க்குமடா – சிலர்
மெச்சிட மேடை ஏறிடின் அவனை
மேலவன் ஆக்குமடா 2

ஒருமுறை சொன்னால் உண்மையைப் பொய்யென்
றுடனே இகழுமடா – பொய்யைப்
பலமுறை சொன்னால் மெய்யென நம்பிப்
பணிந்தே புகழுமடா 3

யாரது சொன்னார் ஏனது சொன்னார்
என்றே அறிவதில்லை – அட!
யாரெது சொலினும் ஆறறி வுள்ளார்
ஆடுகள் ஆகினரே 4

---

**பாடற் குறிப்பு:–** 26.11.1976 ஆம் நாள் பாடியது.

## 22. இருவகை மயக்கம்

**(நூல்:–பாடுங் குயில்)**

**(கள்ளுண்டான் களி மயக்கத்தில் பாடுவது)**

இது ஒருவித மயக்கம் அது ஒருவித மயக்கம்
இரண்டுக்குமேஒரு கால்தான் மயக்கம்
இது மது அது மாது
–இதுஒரு

மதியினை மயக்கும் மதுவுணும் போது
மனத்தினை மயக்கும் மலர்விழி மாது
–இதுஒரு

சொல்ல நினைத்தால் சொல்தடு மாறும்
சொக்கிய விழிகளில் சுகமிக ஏறும்
மெல்லிய ஆடையும் மெய்தனிற் சோரும்
மேலுல கிங்கெ வந்தெதிர் சேரும்
–இதுஒரு

உண்டதும் தலையில் ஏறிடும் போதை
ஒஓ தரையில் மாறிடும் பாதை;
கண்டதும் உணர்வில் மீறிடும் போதை
கலந்தபின் அடடா ஊறிடும் காதல்
–இதுஒரு

---

**பாடற் குறிப்பு:–** 15.12.1976 ஆம் நாள் பாடியது.

## 23. தப்புத் தாளம்

**(நூல்:–பாடுங் குயில்)**

மனிதன் பெற்றான் ஒரு பாட்டு – பாடி

மகிழ்ந்தான் மனம்போல் தாளமும் போட்டு
—மனிதன்

இனிதென அவனவன் இசைகளும் அமைத்தான்
இதுதான் இசையென விளக்கமும் கொடுத்தான்
—மனிதன்

இசையுடன் பாடலை அவன்வாய் இசைக்கும்
இன்னொரு பண்ணிசை அதனுடன் கலக்கும்
வசையெனச் சொன்னால் அவனதை மறுக்கும்
வளரும் உலகில் புதுமையென் றுரைக்கும்
—மனிதன்

தப்புடன் சொற்பொருள் அறியா துரைக்கும்
தாளமும் சிலசில சமயங்கள் சருக்கும்
எப்படிப் பொறுப்பதென் றுலகமும் வெறுக்கும்
எனினும் தடுத்திட முயலா திருக்கும்
—மனிதன்

---

**பாடற் குறிப்பு:—** மனிதன், வாழ்க்கையைத் தவறாகப் பயன்படுத்துவது கண்டு பாடியது – 18.2.1979.

## 24. படிப்பும் நடப்பும்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

படைத்துவைத்த நீதிகளுக் கேதடா பஞ்சம்?
படித்தவன்தான் நாணமின்றிச் செய்கிறான் வஞ்சம்
கொடுத்துவைத்த பொருளிருந்தும் ஏனடா பஞ்சம்?
குறுக்குவழி நடப்பதனால் என்னடா மிஞ்சும்? 1

நடுநிலைமை கொண்டுநட வாழ்க்கையி லென்றார்
நடைவழியில் ஓரமறிந் தேகிடச் சொன்னார்
கெடுவழியே நாடுபவன் மாறி நடந்தான்
கீழ்மகனாய் நல்வழியை மீறி நடந்தான் 2

பிறர்பொருளைத் தன்பொருள்போற் போற்ற மொழிந்தார்
பேதையிவன் அப்பொருளை மாற்ற நினைந்தான்
எவர்பொருளுந் தன்பொருளே என்று நடந்தான்
எதையுமிவன் ஏப்பமிட வாயைத் திறந்தான் 3

உள்ளமதில் மாசகற்ற ஓதி யறிந்தான்
உடல்தனையே தூய்மைசெய நாளும் முயன்றான்
கள்ளவழி தானறிந்து செல்ல நினைந்தான்
கற்றதெலாம் காற்றில்விட உள்ளம் விழைந்தான் 4

தத்துவங்கள் வித்தகங்கள் கூட்டி யெடுத்தான்
தான்படித்த வித்தைகளைக் காட்டி முடித்தான்
புத்தகங்கள் அத்தனையும் வீசி யெறிந்தான்
புன்மைகளைத் தான்பிடித்தே வாழ நினைந்தான் 5

## 25. தன்னம்பிக்கை

**(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)**

படகொடு கடலிற் செல்வோன்
பாய்ந்திடும் அலைகள் கண்டு
நடுவினிற் கவிழும் என்று
நடுங்குவ தில்லை; வான
இடைவெளி பறக்கும் மாந்தன்
இடர்வரு மோவென் றெண்ணிக்
கடுகள வேனும் அச்சம்
கருத்தினிற் கொள்வ தில்லை 1

சரிவுகள் கண்டு மாந்தன்

சலிப்புளங் கொள்ளு மாகில்
பரிவுடன் சுரங்கம் புக்குப்
பசும்பொனைத் தருவ தேது?
திரிதரும் சுறவும் வீசும்
திரைகளும் கடலிற் கண்டு
வெருவுறு மாகில் முத்து
வெளிப்படல் காண்ப தேது? 2

எரிசுடர் வான வீதி
இடர்களை அஞ்சி நின்றால்
அறிவியல் மாந்தன் திங்கள்
அதனிடை நடப்ப தெங்கே?
சிறைதுயர் தூக்கு மேடை
செக்கடித் தொல்லை கண்டு
வெருவுது மாகில் நாடு
விடுதலை பெறுவ தெங்கே? 3

வாழ்விலும் அலைகள் உண்டு;
வருமிடர் பலவும் உண்டு;
வீழ்வுறும் சரிவும் உண்டு;
விழுங்கிடும் சுறவும் உண்டு;
பாழ்படும் இவற்றைக் கண்டு
பதறிடா தெதிர்த்து நின்று
தாழ்வுறாத் துணிவை நம்பித்
தலைப்படின் இன்பங் காண்பாய். 4

தனதுளத் துணிவை நம்பித்
தாழ்விலா முயற்சி கொண்டான்
வினையிடை ஊழைக் கூட
வென்றிட வல்லான் என்று
மனவளப் புலவன் சொன்னான்;
மற்றிதை மறுப்பா ரில்லை;
உனையினி நம்பு; வாழ்வில்
உயர்வது திண்ண மிங்கே! 5

---

**பாடற் குறிப்பு:–** 30.1.1980 ஆம் நாள் பாடியது.

## 26. சேரிடம் அறிந்து சேர்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

நளிமலர்க் காவுள் [1]வளிவரு மாகின்
குளிர்வுறும் மணம்பெறும் நலமும் கொடுக்கும்;
சுடுநிலந் தழீஇ அதுவரு மாகின்
கொடுவளி யாகித் துயர்தான் கொடுக்கும்;
தேனொடு கலந்தால் ஆன்பால் சுவைமிகும்;
நீரொடு கலக்குமேல் சீரது குறையும்;
இருசுழிக் கொம்புடன் வருகுறிற் ககரம்
பெருகிய ஒலியுடன் நெடிலெனப் பெயர்பெறும்;
ஒருசுழிக் கொம்புடன் காவெனும் நெடிலுறின்
குறைவுறு மொலியுடன் குறிலெனப் பெயர்பெறும்;
நல்லவர்ச் சார்வோர் நல்லோ ராகுப
அல்லவர்ச் சார்வோர் அல்லரா குபவே;
சேரிடன் அறிந்து சேர்க இன்றேல்
சீரழி வாகிச் சிறுமை மிகுமே!

**பாடற் குறிப்பு:–** 29.4.1980 ஆம் நாள் பாடியது.

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. வளி –காற்று.

## 27. ஆசையெனும் ஆழ்கடலில்
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

ஆசையெனும் ஆழ்கடலில் வலைவீசினான்
அதிற்கிடைக்கும் மீன்களுக்கு விலைபேசினான்
காசுபெற வேமனிதன் நிலைமாறினான்
கண்ணியத்தை விற்பதற்கும் விலைகூறினான் 1

காதலெனும் மீனதனைக் கண்டுபிடித்தான்
கலியாணச் சந்தையிலே கொண்டுகொடுத்தான்
போதுமென்ற நெஞ்சமின்றி நின்றுதுடித்தான்
போதாமல் தான்தனியே கண்ணீர்வடித்தான் 2

வாணிகத்துப் பெருமீனைப் பற்றநினைத்தான்
வஞ்சகத்தைத் தூவியதைச் சுற்றி வளைத்தான்
நாணயத்தை நேர்மையுடன் கொன்றுமுடித்தான்
நாள்முழுதும் கொள்ளையிடும் நெஞ்சுபடைத்தான் 3

சொன்னதெலாம் நம்புகிற மாந்தரிடத்தே
தொண்டெனுமோர் போர்வையினைப் போர்த்துநடித்தான்
கன்னமிடுங் கோல்களின்றிக் காசுபறித்தான்
கலக்கிவிட்ட நீரதனில் மீன்கள்பிடித்தான் 4

---

**பாடற் குறிப்பு:—** 1.1.1982 ஆம் நாள் பாடியது.

## 28. எத்தனைப் பாடல்கள்!
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

முதலில் கேட்பது தாலாட்டு
முடிவில் முகாரி எனும்பாட்டு
இதனிடை வாழும் மனிதனவன்
எத்தனைப் பாடலைப் பாடுகிறான்!
—முதலில்

காதல் இன்பங் கனிந்திடும் ஒன்று
கலக்கம் ஏக்கம் கலந்திடும் ஒன்று
மோதும் அவலம் முகிழ்த்திடும் ஒன்று
முழுதும் அழுகையில் முடிந்திடும் ஒன்று
—முதலில்

குரலும் வீணையுங் குழம்புவ துண்டு
கொட்டிய தாளந் தப்புவ துண்டு
பொருளும் பாட்டும் முரண்பட லுண்டு
பொருளே விளங்காப் பாடலு முண்டு
—முதலில்

விருப்பை வளர்க்கும் பண்களு முண்டு
வெகுளி மிகுக்கும் பாடலு முண்டு
வெறுப்பைக் கொடுக்கும் ஓசையு முண்டு
வீரமும் மானமும் இடையிடை உண்டு.
—முதலில்

## 29. வாழ்க்கைப் போராட்டம்
(நூல்:—நெஞ்சிற் பூத்தவை)

கலிவெண்பா

ஆழம் மிகவுடைய ஆறென்று வாழ்க்கைதனைச்
சூழும் அறிவதனால் சொன்னால் மிகப்பொருந்தும்;
வேகப் புனல்தள்ளி வெள்ளத் தெதிர்நீந்திப்
போகப் பயின்றவரே போற்றுங் கரைகாண்பர்;

வட்டப் பெருஞ்சுழிகள் வாய்திறந்து நிற்பதுண்டு—
எட்டிப் பிடித்திழுத்தே ஏப்ப மிடமுயலும்;
மூழ்கிச் சிலகாலை மூச்சடக்கிச் செல்கின்ற
சூழ்நிலையும் நேர்வதுண்டு சோர்ந்துவிடக் கூடாது;
துன்பம் ஒருகரையாய் இன்பம் மறுகரையாய்,
முன்பே அமைந்த முறைமை யுடையதுதான்;
அந்தக் கரையிலையேல் அவ்வாற்றின் போக்கதனால்
எந்தத் துயர்விளையும் என்றுரைக்க ஏலாது;
கூட்டாய் முகில்பொழியக் கூடிப் புனல்பெருகும்
காட்டாறாய் ஒவ்வொருகால் காண்பதுண் டவ்வாழ்க்கை
சேறாய்க் கலங்கிச் சிதறிக் கழிநீராய்,
ஊராமல் ஊர்ந்துவரும், ஓடிக் குழிவீழும்,
நாற்றம் மிகுந்திருக்கும் நாட்டில் சிலர்வாழ்க்கை,
மாற்றி யமைக்க வழியறியா தேங்குகிறார்;
நல்லமலர்ச் சோலைக்கும் நல்வாழ்க்கை ஒப்பென்று
சொல்வதற் குள்ளம் துடிப்பதனால் சொல்கின்றேன்;
செய்கையுடன் பண்பு சிறந்திருக்கும் நன்மனையாள்
மெய்வருடி இன்புறுத்தும் மென்தென்றற் காற்றாவாள்;
நண்ணி மயக்குறுத்தும் நன்மழலைச் செல்வங்கள்
கண்ணைக் குளிர்விக்கும் வண்ணமலர்க் கூட்டங்கள்;
பண்ணெழுப்பிப் பூத்தழுவிப் பாடுஞ் சுரும்பொலிகள்
பெண்ணெழுப்பும் பாட்டில் பிணைந்த குரலிசையாம்;
கொம்புத்தேன் தந்த கொழுஞ்சுவையை வாயிதழின்
[1]வம்புத்தேன் தந்து மகிழ்விக்கும்; ஆதலினால்
நல்வாழ்க்கை ஒப்பாகும் நல்லமலர் சோலைக்கு;
சொல்வார்க்குத் தோன்றாது செல்வார்க்குத் தோன்றுமிது;
தான்பிறந்த நாள்தொட்டுத் தண்மதியில் போயிறங்க
வான்பறக்கும் நாள்வரையில் வாழ்க்கைஒரு போர்க்களந்தான்;
அன்னை கருக்கொள்ளும் அப்பொழுதே கூடுமணு
முன்னம் பொருதன்றோ முற்றி உருவாகும்;
பின்னர்ப் பிறந்து பிணிகளொடு போராட்டம்
இன்னும் அளவிலா எத்தனையோ போராட்டம்
மாந்தன் வரலாறே மாபெரும் போராட்டம்
காந்தும் வறுமையொடு கண்மூடிக் கொள்கைஎனச்
சீறி வரும்பகையோ செப்பத் தொலையாது
நூறு பகைவரினும் நூறித் தொலைப்பதற்
கூக்கந், துணிவுடைமை, ஓர்ந்துணருங் கூரறிவு,
காக்கும் படையாகக் கைக்கொண்டு போராடி
வெற்றிக் களிப்போடு வீறுநடை போட்டுநலம்
பெற்றுத் திளைப்பதுதான் பேருலக வாழ்க்கைநெறி;
போராட்டங் கண்டஞ்சிப் போகாமல் வாழ்க்கைஎனும்
தேரோட்டி இன்பந் திளைப்பவனே வீரன்;
ஒருபகை கண்டஞ்சி ஓலமிட் டோடி
மருள்பவன் நாளும் மடிகின்ற கோழை;
நிலவுக்கும் வாழ்க்கை நிகராகும், ஒரும்
புலனுக்கு நன்கு புலனாகும் இவ்வுண்மை;
கூடிக் களிப்போர்க்குக் கோடி மகிழ்வுதரும்,
ஊடிப் பிரிந்தோர்க்கோ ஓயாக் கவலை தரும்;
கூறுமிவை வானிலவின் கொள்கையல, சூழ்நிலைகள்
சேரும் மனநிலையாற் செய்பயனும் வேறாகும்;
சூழ்நிலைக் காளாகிச் சுற்றும் மனநிலையால்
வாழ்வினையும் வெவ்வேறு வாட்டத்திற் காண்கின்றான்;
தேய்தலும் பின்வளர்ந்து தேறுதலும் விண்மதிக்
கோய்தலிலாப் பண்பாகும்; வாழ்விலுமுண் டாதலினால்
வாழ்வை வெறுக்காதீர் வாழும் வகைதெரிந்து
தாழ்வைப் புறங்கண்டு தன்முயற்சி மேலோங்கிப்
போராடி வெற்றிப் புகழ்மாலை கொண்டிடுவீர்
நேரான வாழ்வில் நிலைத்து.

---

**பாடற் குறிப்பு:—** சென்னையில் நடைபெற்ற மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டுக் கவியரங்கில் பாடியது – 27.12.1968.

**அருஞ்சொற் பொருள்:—** 1. வம்புத்தேன் – புதிய தேன்.

## 30. இன்பம் எது?

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

இவ்வுலகில் மக்களினம் விழைவ தெல்லாம்
இன்பமெனும் ஒன்றன்றி மற்றொன் றில்லை;
எவ்வுயிரும் இன்பினைத்தான் தேடித் தேடி
இளைத்தலுக்கக் காண்கின்றோம்; துன்பம் என்றால்
ஒவ்வுவதிங் கொன்றில்லை; முனிவர் தாமும்
ஓய்வின்றித் தவங்கிடந்து முயல்வ தெல்லாம்
அவ்வுலக இன்பத்தைப் பெறுதற் கென்றால்
அதன்பெருமை சொலற்கெளிதோ? அரிதே யன்றோ? 1

உலகியலின் உண்மைநிலை உணரா மாந்தர்
ஒப்பரிய இன்பந்தான் வாழ்க்கை என்பர்;
விலகரிய துன்பமுடன் கலந்த தைத்தான்
வியனுலக வாழ்க்கையெனச் சான்றோர் சொல்வர்;
நிலவிவரும் இடரனைத்தும் நின்று தாங்கி
நிலைகலங்கா நெஞ்சுரத்தால் முயன்று, வெற்றி
குலவிவர வாழ்வதுதான் இன்ப மாகும்
குறள்தந்த பெருமைமிகு நெறியும் ஆகும். 2

வாழ்க்கையினை ஆறென்றால், நெறிப் படுத்தும்
வரம்பாகும் இருகரையாம் இன்ப துன்பம்
வாழ்க்கையினைச் சகடென்றால் இயங்கச் செய்யும்
வட்டமெனும் ஈருருளை அவ்வி ரண்டாம்;
வாழ்க்கையினை நாளென்றால் முழுமை செய்ய
வருபகலும் இரவுமென அவற்றைச் சொல்வோம்
வாழ்க்கையினில் இவ்விரண்டும் உண்டென் றெண்ணி
வகைதெரிந்து நடப்பவர்க்கே இன்பந் தோன்றும். 3

ஏர்நடத்தி விதைவிதைத்து, நாற்றுப் பாவி
எருவிட்டுக், களையெடுத்து, நாளும் நாளும்
நீர்கொடுத்துக் காத்திருந்து பாடு பட்டோன்
நெடுந்துன்பம் உறக்கண்டான்; அதனால் இந்தப்
பார்நடக்க உணவளித்து வள்ள லாகிப்
பசிகளைந்து வாழ்கின்ற இன்பங் கண்டான்
கூர்படைத்த அறிவாளர் பட்ட துன்பம்
கொடுத்தவையே நாம்நுகரும் இன்ப மெல்லாம். 4

குறுமலர்க்கண் சிறுமகனைக் கொஞ்சும் தாய்க்குக்
கூடிவரும் இன்பத்திற் களவே இல்லை
கருவுயிர்க்கும் போதவள்தான் அடையும் துன்பம்
கணக்குண்டோ? பகலுக்கு வெம்மை என்றால்
இரவினுக்குத் தண்மையன்றோ? உலகில் என்றும்
இருகூறும் கலந்திருக்கும்; ஒன்றில் ஒன்றாம்;
உறுதுயர்க்கு மறுபுறமே இன்ப மாகும்
உற்றறிவார் தமக்கேஇவ் வுண்மை தோன்றும். 5

இன்பமெது வெனவுணர்ந்து தெளிந்து சொல்ல
எவராலும் இயலாது போதும் போதும்
என்பதிலே காண்கின்றான் ஒருவன் இன்பம்;
எனைத்துநிதி பெற்றாலும் போதா தென்றே
தன்பெருவாய் திறந்தலைந்து பொருளைத் தேடித்
தவிப்பதிலே மற்றொருவன் இன்பங் காண்பான்;
மன்பதையின் மனத்தளவே ஆகும் அல்லால்
மதிப்பிட்டுச் சொல்லுதற்கோர் வகையே இல்லை. 6

ஒருவனுக்கிங் கின்பமெனத் தோன்றும் ஒன்றே
உறுதுன்ப மெனத்தோன்றும் மற்ற வர்க்கே;
ஒருநிலத்தில் இன்பமெனக் கொண்ட ஒன்றை
ஒதுக்கிடுவர் மறுபுலத்தில் துன்பம் என்றே;

பெருவிருப்பால் இஃதொன்றே இன்ப மென்பார்
    பிழையென்று மற்றொருவர் பிறிது சொல்வார்;
ஒருவருக்கும் புரியாத பொருளே யாகி
    உலகிலது சுழன்றுவரக் காணு கின்றோம். 7

தீப்பிழம்பின் உருண்டைஎனக் கிளர்ந்தெ ழுந்து
    திரைகடலில் முகங்காட்டுங் கதிரோன், மாற்றார்
நாப்பொழிந்த இகழ்வுரையால் சினந்தெ ழுந்து
    நண்ணாரைப் புறங்கண்ட போர்க்க ளம்போல்
மீப்படர்ந்த மேற்றிசையின் செக்கர் வானம்,
    மெல்லியலார் முகம்போலப் பொலிந்து விண்மீன்
நாப்பண்வரும் வெண்மதியம், அதைத் தொடர்ந்து
    நண்ணிவரும் முகிலினங்கள் காட்சி யின்பம். 8

மலருமெழில் வண்ணமலர் கண்ணுக் கின்பம்;
    மருவிவரும் தென்றல்நலம் உடலுக் கின்பம்;
பலமலருள் விரிந்தமணம் மூக்கிற் கின்பம்;
    பாடிவரும் வண்டொலியோ காதுக் கின்பம்;
நலமருவும் நறுங்கனிகள் நாவிற் கின்பம்;
    நானிலத்துத் தோன்றுபொருள் அனைத்து மிங்குப்
புலனைந்தும் நுகரவரும் இன்ப மன்றோ?
    பொருந்துசுவை நுகருங்கால் அளவு வேண்டும். 9

இரவுபகல் எனநோக்கா துழைத்துச் செல்வம்
    ஈட்டிமிகத் தொகுப்பதிலே இன்பங் காண்பர்;
வரவுவரும் தொகைபலவாய் மிகுதல் கண்டு
    வகுத்ததனை ஈவதிலே இன்பங்காண்பர்;
கரவுமனங் கொண்டொன்றும் நுகரா தெண்ணிக்
    கணக்கிட்டே பொழுதெல்லாம் இன்பங் காண்பர்;
உரமுடைய நன்மனத்தர் ஈந்து நின்றே
    உறுவறுமைத் துயர்வரினும் இன்பங் காண்பர்; 10

அளிப்பதிலே சிலர்க்கின்பம்; மற்றோர் வாழ்வை
    அழிப்பதிலே சிலர்க்கின்பம்; நாடு வாழ
உழைப்பதிலே சிலர்க்கின்பம்; வஞ்ச கத்தால்
    ஊரவர்தம் உழைப்பாலே உடல்வ ளர்த்துப்
பிழைப்பதிலே சிலர்க்கின்பம்; பொய்ம்மை பேசிப்
    பிறர்நலத்தில் அழுக்குற்றுப் புறமுங் கூறிச்
செழிப்பதிலே சிலர்க்கின்பம்; வறுமைப் போதும்
    செம்மைநெறி குன்றாமை சிலருக் கின்பம். 11

பாடுபட்டுப் பெற்றோர்கள் கல்விக் காகப்
    பணமனுப்பச் செலவழித்துக் கூடிப் பாடிக்
கூடுவிட்ட பறவைஎன ஓடி ஆடிக்
    கோலங்கள் பலசெய்து, வாங்கி வைத்த
ஏடுதொட்டுப் பாராமல், கண்வி ழித்தே
    எக்களித்துத் திரிவதிலே சிலருக் கின்பம்;
நாடுகெட்ட நிலையுணர்ந்து, தமைநி னைந்து,
    நடப்பதற்கு முயல்வதுதான் நிலைத்த இன்பம். 12

நமதுதொழில் பயில்வதெனக் கடமை எண்ணி
    நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம்வி ளைக்க
உமதறிவு, செயல்,நினைவை ஆக்கல் வேண்டும்;
    உலகும்மைத் தக்கவரென் றுரைக்கும் வண்ணம்
நுமதுடைமை கண்ணியமென் றெண்ணி எண்ணி
    நொடிப்பொழுதும் வழுவாமல் ஒழுகல் வேண்டும்;
குமையாமல் சிதையாமல் கட்டுப் பாடும்
    கொண்டவராய் விளங்குவிரேல் இன்பந் தோன்றும். 13

தொடங்குங்கால் துன்பமெனத் தோன்று மேனும்
    துளங்காமல் தொடர்ந்திருந்து முயல்வீ ராயின்
மடங்கொன்று பேரறிவு வளரக் காண்பீர்;
    மட்டில்லா இன்பநிலை தொடரக் காண்பீர்;
முடங்கியுள நம்நாடு நாளை உங்கள்

முகங்களைத்தாம் எதிர்நோக்கும்; அதனால் நெஞ்சில்
திடங்கொள்க பயின்றிடுக வெற்றி கொள்க
திருநாட்டில் நல்லாட்சி மலரச் செய்க. 14

---

**பாடற் குறிப்பு:–** உத்தமபாளையம் கருத்தராவுத்தர் கல்லூரிக் கவியரங்கில் பாடியது – 27.1.1967.